# கலைஞரும் நானும்

25

"**ஈ**ரோட்டில் பெரியார் குருகுலத்தின் மாணவர் அவர். அவருடன் ஆரம்ப காலத்தில் பயணம் செய்தவர், எனது தந்தை சம்பத். அதனால், என் மீது தனிப்பட்ட பாசமும் அக்கறையும் கொண்டிருந்தார்" என கலைஞருடனான தனது நினைவுகளைப் பகிர்கிறார், தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவரும், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினருமான ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்.

■ ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன்

## "தம்பி உங்ககூட இருக்கோம்!"



"கலைஞரை முதன்முதலில் எப்போது பார்த்திருப்பேன் என்பதெல்லாம் தெரியாது. ஏனென்றால், எனது குழந்தைப் பருவத்திலிருந்தே கலைஞரைக் கண்டு வந்திருக்கிறேன். ஆனால், 1956-ஆம் ஆண்டு திருச்சியில் நடைபெற்ற தி.மு.க. 2-வது மாநில மாநாட்டின்போது அவரைச் சந்தித்தது நன்றாக நினைவில் உள்ளது. அப்போது, எனக்கு எட்டு வயதிருக்கும். அந்த மாநாட்டில்தான் தி.மு.க. தேர்தலில் நிற்பது குறித்து முடிவெடுக்கப் பட்டது.

காவிரி ஆற்றின் கரையில் இருந்த என்.எஸ். பங்களா என்ற இடத்தில் எங்கள் குடும்பம், பேரறிஞர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன் மற்றும் கலைஞர் என முக்கியத் தலைவர்கள் குடும்பத்துடன் தங்கினர். அங்கிருந்த நாட்களில் எல்லோரும் ஒரே இடத்தில் அமர்ந்து சாப்பிடுவோம். அப்படி, கலைஞரோடு நேரம் கழித்த சிறுவயது ஞாபகம் உள்ளது. பின்னர் சென்னையில் படித்துக் கொண்டிருந்தபோது, பார்க்க நேர்ந்தாலும் பேசும் சூழல் அமைந்ததில்லை. சுமார் 40 ஆண்டுகள் கழித்துத்தான் அவரோடு பேசும் சூழல் அமைந்தது.

### சிறப்பு மலரில் பெருமை

நான் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரான பின்னர், அவரோடு நெருங்கிப் பழகவும் பேசவும் வாய்ப்புகள் அமைந்தன. அப்போது, எனது '55-வது வயது சிறப்பு மலர்' வெளியிட்டபோது வாழ்த்துச் செய்தி அனுப்பி இருந்தார். குறிப்பாக, எனது தந்தையின் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டு என்னை வாழ்த்தியது, எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

"இளங்கோவன் பேச்சைக் கண்களை மூடிக் கொண்டு கேட்டால், **'சொல்லின் செல்வர்'** சம்பத்துதான் பேசிக் கொண்டிருக்கிறாரோ என நினைக்கத் தோன்றும்" எனக் குறிப்பிட்டு வாழ்த்தினார். அப்படியாக அவரது மனதில் அழிக்க முடியாத சித்திரமாக எனது தந்தையும் நானும் இடம்பெற்றிருந்தோம் என்பதை நினைத்துப் பார்க்கிறேன்.

### ஈரோடு குடும்பத்துப் பிள்ளை!

அரசியல் ரீதியாகவும், குடும்ப உறவிலும் என்மீது தனிப்பட்ட அன்பு காட்டியுள்ளார். ஈரோட்டுக் குடும்பத்துப் பிள்ளை என்கிற பாசம் அவருக்கு உண்டு. பீட்டர் அல்போன்ஸ் மற்றும் கோபண்ணா எழுதிய நூல் வெளியீட்டு விழா அவரது தலைமையில் நடைபெற்றது. அப்போது எனது உரையைக் கேட்ட கலைஞர், அவரது வாழ்த்துரையில் அதைக் குறிப்பிட்டு ரொம்பவே சிலாகித்துப் பாராட்டினார்.

"அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாறு தொடர்பாக, ஏராளமான படங்கள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் படங்களின் வரிசையில் எனது அருமை நண்பர் சம்பத் படத்தை பார்க்கும்போதெல்லாம் எனக்கு இளங்கோவன் நினைவுதான் வரும். அதுபோல, இந்த மேடையில் இளங்கோவனைப் பார்க்கும் போது எனக்கு சம்பத் நினைவு வருகிறது" எனக் கூறி வாழ்த்தினார். அது எனக்குப் பெருமையாக இருந்தது. என் மீது அவர் கொண்டுள்ள பாசத்தை உணர வைத்தது.

> நாம் அருகில் இல்லாதபோதும், நமக்காக ஏதாவது செய்ய வேண்டும் என நினைப்பது கலைஞர் குணம்.

### தம்பி என்கிற உரிமை

என்னை எப்போதும் 'தம்பி' என்றுதான் அழைப்பார். அப்படி அழைப்பதற்கான உரிமை தனக்கு உள்ளது என ஒருமுறை மேடையிலேயே குறிப்பிட்டார். "இளங்கோவனை தம்பி என்று சொல்லி அழைக்க, அதற்கான உரிமையை அவர் எனக்குக் கொடுப்பார்" என அன்பு பாராட்டி இருக்கிறார்.

கூட்டணிக் கட்சித் தலைவராகத் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைகள் நடக்கையில் இருப்பேன். எண்ணிக்கையில் சில முன்பின் இழுபறிகள் இருந்தால், கடைசியாக கலைஞரிடம் செல்வோம். கலைஞர் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, "இளங்கோவனுக்காக இதைச் செய்கிறேன்" என எங்களை மகிழ்விக்கும் வகையில் ஒதுக்கீடு செய்வார். அதுபோல இரண்டு முறை நடந்துள்ளது.

### 'ஜாக்கிரதையா இருங்க...'

ஜெயலலிதா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில், அவரது அராஜக ஆட்சியைக் கண்டிக்கும் விதமாக அறிக்கைகள் விடுவேன். அப்படியான அறிக்கைகளில் பயன்படுத்திய ஒரு வார்த்தைதான் 'கோமளவல்லி'. அந்தச் சொல், இப்போது குறிப்பிடுவதுபோல சொல்வதென்றால் வைரலானது. கலைஞர் அதைச் சுட்டிக்காட்டி அறிக்கையெல்லாம் வெளியிட்டுள்ளார்.

ஜெயலலிதாவுடன் நேரடியாக அறிக்கைப் போர் நடந்து கொண்டிருந்த நாட்களில், ஒரு நாள் காலையில் போன் செய்தார். நான் அரைத் தூக்கத்தில் போனை எடுத்து யார் எனக் கேட்கிறேன். "நான் கருணாநிதி பேசுகிறேன்" என்றார். எனக்குப் புரியாமல், மீண்டும் கேட்க, பின்னர், கலைஞர் எனத் தெரிந்ததும் பதற்றமாகி விட்டேன்.

அம்மையார் குறித்த எனது அறிக்கையைப் படித்ததைக் குறிப்பிட்டு, "ஜாக்கிரதையா இருங்க. அவங்க எந்த எல்லைக்கும் போகக்கூடியவர்கள்" என எச்சரிக்கை செய்ததுடன், "நாங்கெல்லாம் உங்ககூட இருக்கோம்" என நம்பிக்கை அளித்தார். ஏனென்றால், நான் ஒருமுறை வாக்கிங் செல்லும்போது லாரி மோதும் நிலை வந்தது. அதிலிருந்து தப்பித்திருந்தேன். இதையெல்லாம் மனதில் வைத்து அவர் எனக்கு எச்சரிக்கை செய்தார்.

கலைஞருக்குப் பதில் அறிக்கைவிடும் ஜெயலலிதா, அவற்றில் குட்டிக்கதைகள் சொல்லி அரசியல் செய்தார். நான் அவருக்கு எதிர்வினையாக 'குட்டிக்கதை சொல்லும் குசலக்குமாரி' என விமர்சனம் செய்திருந்தேன். "கலைஞர் கதை சொல்கிறார் என்றால் அவருக்கு கதை தெரியும், வரலாறு, இலக்கியம் தெரியும், அதை காப்பி அடிக்கும் உங்களுக்கு என்ன தெரியும்? ஆகவே, குசலக்குமாரியாக இருக்காதீர்கள்" என விமர்சனம் செய்தேன்.

குசலக்குமாரி என்பவர் பழைய நடிகை. அதன் பின்னர் கலைஞர் என்னை சந்திக்கையில், "என்ன தம்பி உங்களுக்கு குசலக்குமாரி வரை தெரியுமா" என கிண்டல் செய்தார்.

### சொல்லில் மட்டுமல்ல செயலிலும்

சம்பத்தின் நண்பர் என சொல்லில் மட்டுமல்ல, செயலிலும் நிகழ்த்திக் காட்டுவார் கலைஞர். 2004-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத் தேர்தலின்போது கோபிச்செட்டிப்பாளையம் தொகுதியில் போட்டியிட்டேன். அப்போது எனக்காகப் பிரசாரம் செய்து ஆதரவு திரட்டித் தந்தார்.

அமைச்சரவை தொடர்பாக அன்னை சோனியாகாந்தி அவர்களிடம் பேசும்போது, "தி.மு.க. எம்.பி.க்கள் தவிர, தம்பி இளங்கோவன் அவர்களையும் சேர்த்திருப்பீர்கள் என நம்புகிறேன்" எனக் கூறியிருக்கிறார். நாம் அருகில் இல்லாதபோதும், நமக்காக ஏதாவது செய்ய வேண்டும் என நினைப்பது கலைஞர் குணம். என்னுடைய நலனில் அவ்வளவு அக்கறை கொண்டவராக கடைசிவரை இருந்தார். நாட்டுக்கு அவர் போன்ற தலைவர்கள் கிடைப்பது அரிது!"

...பகிர்வார்கள்

### சிவாஜி தவறவிட்ட வாய்ப்பு!

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் தனிக்கட்சி தொடங்கியபோது, தி.மு.க. கூட்டணியில் சேர்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டேன். அன்பில் தர்மலிங்கம் அவர்களை பேச்சுவார்த்தைக்கு கலைஞர் அனுப்பி இருந்தார். ஆனால், கலைஞர் பேச்சைக் கேட்காமல் சிவாஜி வேறு நிலை எடுத்தார். ஒருவேளை சிவாஜி தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்திருந்தால் அரசியலில் குறிப்பிட்ட வளர்ச்சி கண்டிருப்பார். நான் அந்த முயற்சியை எடுத்தேன் என்பது கலைஞருக்குத் தெரியும்.

## எரியும் மணிப்பூர்!

**ம**ணிப்பூர் மாநிலத்தின் இயல்பு நிலை கடந்த 50 நாட்களுக்கு மேல் நிலைகுலைந்துள்ளது. சிறுபான்மை இன மக்கள், ஆளும் பா.ஜ.க அரசு மீது நம்பிக்கை இழந்து நிர்க்கதியாக நிற்கின்றனர். ஒன்றிய பா.ஜ.க. அரசும் வன்முறைகளை வேடிக்கை பார்த்தபடியே இருப்பது மக்களுக்கு மேலும் அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. மக்கள் வீடுகளை இழந்து, பாதுகாப்பு முகாம்களில் தஞ்சமடைந்து சொந்த நாட்டிலேயே அகதிகளாக மாறியுள்ளனர். அடிப்படைத் தேவை, வெளியுலகத் தொடர்பு, இணைய வசதி ஆகியவை முற்றிலும் முடக்கப்பட்டிருக்கிறது. மக்களைச் சந்திக்க எதிர்க்கட்சிகளையும் அனுமதிக்கவில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தவும் ஒன்றிய அரசு முன்வரவில்லை.

இந்த நிலையில், மணிப்பூரில் என்ன நடக்கிறது, என்பதை அனைத்து மாநில மக்களுக்கும் கொண்டு செல்ல ஜனநாயகச் சக்திகள் முன்வந்துள்ளன. சென்னையில், **'திராவிட இயக்கத் தமிழர் பேரவை'** சார்பில் நிகழ்ச்சி நடைபெற்றது. பா.ஜ.கவின் மக்கள் விரோத அரசியலைப் புரிந்து கொள்ள இதுபோன்ற நிகழ்ச்சிகள் உதவுகின்றன. இந்தியா முழுவதும் பிரிவினைகளைத் தூண்டி குளிர்காய நினைக்கும் பா.ஜ.கவின் சதியைப் புரிந்துகொள்ள இதுபோன்ற அறிவுச் செயல்பாடுகள் அவசியமாகும். அறிவாயுதங்களோடு 2024-ஆம் ஆண்டு தேர்தலை எதிர்கொள்வோம்.

## ஃப்ளாஷ்பேக்





ஜீவானந்தம்

### தங்கப் பேனா!

1985-ஆம் ஆண்டு மார்ச் 25-ஆம் தேதி, தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை அரசினர் தோட்டத்தில் கழக சட்டமன்ற எதிர்க்கட்சி அலுவலகத்தில் நண்பர்களோடு சந்தித்தேன். சிங்கப்பூரிலிருந்து வந்திருந்ததால், தலைவருக்காகத் தங்கப் பேனா ஒன்றை அங்கிருந்து வாங்கி வந்திருந்தேன். அவரிடம் பேனாவைக் கொடுத்தபோது 'என்ன மாடல்யா' என்று கேட்டார். 'சகிரிஸ்' (SCRIZ) என்றேன். பேனாவைத் திறந்து பார்த்து மகிழ்ந்தார். அப்போது கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியரும் இருந்தார். 38 ஆண்டுகளுக்கு முன் கழகத் தொண்டனாகிய நான் வழங்கிய இந்தப் பரிசை, தலைவர் கலைஞர் ஏற்றுக்கொண்டது என் வாழ்நாளில் மறக்க முடியாத இனிமையான தருணம்.

**-ஏ.சி.ஜீவானந்தம், மண்டபம் மேற்கு ஒன்றிய முன்னாள் பொறுப்பாளர், இராமநாதபுரம் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### பிரிவினைக்கு எதிர்வினை[

**1963-ஆம் ஆண்டு ஜனவரி மாதம், மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்கும் வகையில் பிரிவினைவாத தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தது ஒன்றிய அரசு. அதற்குப் பல விளக்கங்கள் சொல்லப் பட்டாலும், தி.மு.க.வை ஒடுக்க வேண்டும் என்பதே நோக்கமாக இருந்தது. ஆனாலும், ஒரு நொடிகூட தாமதிக்காமல் கழகம் இந்தச் சட்டத்தை எதிர் கொண்டது. இந்த நெருக்கடிகளைச் சமாளித்து, கழகத்தைக் காப்பாற்றி, அதன்மூலம் தமிழ்நாட்டைக் காப்பாற்றும் மிகப்பெரிய பணிகளில் பேரறிஞர் அண்ணா அவர்களுடன் கழகத்தினர் அனைவரும் கடுமையாகப் பணியாற்றினர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 166




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131